கொள்ளப்பட்டாலொழிய வேறு வழி கிடையாது. நாம் இரு மொழிக் கொள்கை என்கிறோம். மத்திய அரசாங்கமோவெனில் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலம் பொது மொழியாக நீடிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அப்படியானால் என்றாவது ஒரு நாள் இந்த நாட்டின் பொது மொழியாக இந்தியை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்ற கட்டாயம் தெரிகிறது. கடந்த 33 ஆண்டுகளாக ஒரு தென்னிந்தியன் பிரதம மந்திரியாகவில்லை. இனிமேலாவது சந்தர்ப்பம் உண்டாவெனில் சந்தேகமாகவுள்ளது என்றுதான் கூற முடியுமே தவிர நிச்சயமாக வரமுடியும் என்று கூறுவது என்பது இன்றைய ஜனநாயக முறைப்படி முடியாது. ஆந்திராவில் தெலுங்கானாவும் ஆந்திராவும் சேர்ந்ததுதான் ஆந்திரப் பிரதேசம் என்று அழைக்கப்படுகிறது. தெலுங்கானாவைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையினராக இருந்தும் கூட இன்றைய முதல்வர் மாபெரும் போராட்டத்தையே நடத்தி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தெலுங்கானாவைச் சேர்ந்தவர் முதல் அமைச்சராக ஆகவேண்டும் என மத்திய அரசை ஒத்துக்கொள்ள வைத்தவர். அதைப்போன்று 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை இல்லாவிட்டாலும் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறையாகிலும் ஒரு தென்னிந்தியன் இந்த நாட்டின் பிரதமர் ஆக வரவேண்டும் என்பதை இந்திய மக்கள் உணர வேண்டும். பண்டித ஜவகர்லால் நேரு கூறிய உறுதி மொழியில் காலவரையின்றி என்பதை மாற்றி நிரந்தரமாக ஆங்கிலம் இந்நாட்டின் ஆட்சிமொழியாக இருந்தாக வேண்டும் என்பதையும் இந்நாட்டு மக்கள் உணரவேண்டும். இது நடைபெறாவிட்டால் இனிமேலும் நாம் மொழிப் பிரச்சனையின் காரணமாக ஒதுக்கப்படுவதை, உதாசீனம் செய்யப்படுவதை பொறுத்துக்கொள்ள முடியாது. ஆகவே, உலகை உய்விக்க வந்த ஏசுபிரானைப் பார்த்து ஜான் என்பவர். 'வரவேண்டியவர் நீங்கள்தானா, வேறு ஒருவருக்காக காத்திருக்க வேண்டுமா' என்று கேட்டதை சிறிது மாற்றி திண்டுக்கல் தேர்தல் மாநாட்டிலே கொங்குதங்கம் சி. சுப்பிரமணியம் புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து தீர்க்கதரிசி என்று கூறியதை உறுதிப்படுத்தும் வகையில் வரவேண்டியவர் நீங்கள்தான் வேறு ஒருவருக்காக காலம் காத்திருக்காது என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

8. அறிக்கை அளித்தல்.

(ஆ) தீ விபத்தினால் பாதிக்கப்பெற்ற குடிசைகளுக்கு நிவாரணம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து வருவாய்த் துறை அமைச்சரவர்கள் விதி 106-ன் கீழ் ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 ஜூலை 4

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தீ விபத்தில் முழுவதுமாக பாதிக்கப்படும் குடிசைகளுக்கு இதுவரையில் குடிசை ஒன்றுக்கு 100 ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. இந்த நிவாரணத் தொகையை குடிசை ஒன்றுக்கு 200 ரூபாய் என்று உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் இந்தப் புதிய அரசு பதவியேற்ற நாளான 9—6—1980 முதல் இது நடைமுறைப்படுத்தப் படும்.

(7) 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்—
பொது விவாதம் (தொடர்ச்சி).

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது மீண்டும் இந்த அவையிலே பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினை பெற்றமைக்காக என்னுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் சைதை தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப்பற்றி இங்கே அவையிலே இருக்கிற பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இங்கே பேசுகின்றபோதுகூட ஆளும் கட்சியினர் சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் எதிர்க்கவும் இல்லை; வரவேற்கவும் இல்லை என்று சொன்னார்கள்.

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறும்போது, 'தேர்தலின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நம்பி வாக்களித்தார்கள்; அந்த தமிழ் மக்கள் மகிழ்ச்சி அடைந்தால் நானும் மகிழ்ச்சியடைவேன்' என்று சொன்னார்கள். அந்த வகையிலே, விமரிசனம் செய்யாமல் கண்டிக்கத்தக்க பல்வேறு அம்சங்கள் இந்த அறிக்கையிலே இருந்தாலும் பெருந்தன்மையோடு சொன்னதன் காரணத்தால்தான் இன்றையதினம் 'இந்து பத்திரிகை' கூட உள்ளதை உள்ளபடியே எடுத்துவைக்கின்ற யதார்த்த நிலையில் இருக்கிறது. அதே நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அதிலே இருக்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டி, நிதிநிலை அறிக்கையை கண்டித்திருந்தால் இன்றையதினம் இந்து பத்திரிகை எப்படி எழுதியிருக்கும் என்று என்னால் யூகிக்க முடியவில்லை. ஆகவே, பெருந்தன்மையோடு இந்த நாட்டு மக்கள் இன்னும் எவ்வளவுகாலம்தான் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை அமைதியாக உட்கார்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.